<u>சுருக்கம்</u>

தோரணவாயில் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – சிவகங்கை மாவட்டம் – காரைக்குடி வட்டம் –பானான்வயல் குரூப் – பெரியகோட்டை விலக்கு ரோடு – புல எண். 529/14, விஸ்தீரணம் 0.07.0 ஏர்ஸ் (அரசு புறம்போக்கு சாலை) – ஸ்ரீதாமணி செல்ல அய்யனார் கோவிலுக்குத் தோரண வாயில் அமைத்தல் – அனுமதி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ஊ.2) துறை**

அரசு ஆணை (நிலை) எண். 75 நாள் : 20.07.2010

படிக்கப்பட்டவை:

1. அரசு கடித எண். 15611/சி3/94–6, ஊரக வளர்ச்சித் (சி3) துறை, நாள் 12.06.1995.
2. அரசு ஆணை (நிலை) எண்.248, ஊரக வளர்ச்சித் (சி2) துறை, நாள் 23.11.1998.
3. மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், சிவகங்கை அவர்களின் ந.க.எண்.எச்.2/27345/08, நாள் 21.05.2010.

* * * * *

<u>ஆணை</u>:

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், பானான்வயல் குரூப், பெரியகோட்டை விலக்கு ரோடு புல எண். 529/14, விஸ்தீரணம் 0.07.0 ஏர்ஸ் ( அரசு புறம்போக்கு சாலை) என்ற இடத்தில் ஸ்ரீதாமணி செல்ல அய்யனார் கோவிலுக்குத் தோரண வாயில் அமைக்க அனுமதி வழங்குமாறு ஆயினிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு.பி.அருண்குமார் என்பவர் மனுச் செய்துள்ளார். மேலும், மேற்படி தோரணவாயிலை ஆண்டு முழுவதும் பராமரிப்பேன் என்றும், மேற்படி தோரண வாயிலினால் பொதுமக்களுக்கு இடையூறு எதுவும் நிகழும்பட்சத்தில் அரசு எடுக்கும் நடவடிக்கைக்குக் கட்டுப்படுவேன் என்றும் உறுதியளித்துள்ளார்.

2. சிறுகப்பட்டி ஊராட்சி மன்றத்தில், 05.04.2008 அன்று நடைபெற்ற சிறுகப்பட்டி ஊராட்சி மன்றக் கூட்டத்தில், மேற்படி இடத்தில் ஸ்ரீதாமணி செல்ல அய்யனார் கோவிலுக்குத் தோரணவாயில் அமைக்க இவ்வூராட்சி மன்றத்திற்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

..2..

3. வருவாய் கோட்டாட்சியர் (பொ), தேவகோட்டை அவர்கள் தனது அறிக்கையில், மேற்கண்ட இடத்தில் போக்குவரத்திற்கு இடையூறின்றி கோவிலுக்கு நேர்த்திக் கடன் செய்யும் பொருட்டு ஸ்ரீதாமணி செல்ல அய்யனார் கோவிலுக்குத் தோரணவாயில் கட்டுவதற்கு மு.ஆயினிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த பெருமாள் அம்பலம் குடும்பத்தார்கள் முடிவு செய்து திரு.பி.அருண்குமார் தலைமையில் கட்ட இருக்கிறார்கள் என்றும், மேற்கண்ட இடத்தில் மேற்படி தோரணவாயில் அமைக்க அனுமதி வழங்கலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

4. கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை), சிவகங்கை அவர்கள் தனது அறிக்கையில், மேலே குறிப்பிடப்பட்ட இடத்தில் அலங்கார தோரண நுழைவுவாயில் கட்டுவதற்கு வாகனப் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் இடையூறு ஏற்படாத வகையில் அரசின் விதிமுறைகளுக்குட்பட்டு நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கலாம் எனப் பரிந்துரை செய்துள்ளார்.

5. சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தனது அறிக்கையில், சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், பெரியகோட்டை சாலை கி.மீ.0/0–2/02 ஸ்ரீதாமணி செல்ல அய்யனார் கோவிலுக்கு முன்பாக தோரண வாயில் அமைக்க எந்தவித ஆட்சேபனையும் இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

6. மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் (பொறுப்பு), சிவகங்கை அவர்கள் தனது கடிதத்தில், சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர், சிவகங்கை கோட்டப் பொறியாளர் மற்றும் தேவகோட்டை கோட்டாட்சியர் ஆகியோர்களின் அறிக்கைகளின் அடிப்படையில் சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், பானான்வயல் குரூப், பெரியகோட்டை விலக்கு ரோடு புல எண். 529/14, விஸ்தீரணம் 0.07.0 ஏர்ஸ் ( அரசு புறம்போக்கு சாலை) என்ற இடத்தில் ஸ்ரீதாமணி செல்ல அய்யனார் கோவிலுக்குத் தோரண வாயில் அமைக்க அனுமதி வழங்கலாம் எனப் பரிந்துரை செய்துள்ளார்.

7. ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் நிறுவப்படும் சிலை, நினைவுத் தூண், நினைவு மண்டபம், நினைவு வளைவு போன்றவை எதுவாயினும் அரசின் ஒப்புதலைப் பெற்றாக வேண்டும் மற்றும் நினைவுத்தூண் நிறுவியவர்களே நினைவுத்தூணின் பராமரிப்புச் செலவினை ஏற்றுக் கொள்ள வேண்டும் என 23.11.1998–ஆம் நாளிட்ட அரசு ஆணை (நிலை) எண்.248–ல் ஆணையிடப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் (பொறுப்பு), சிவகங்கை அவர்களின் கருத்துரு மேலே சொல்லப்பட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி உள்ளது.

8. மேற்கூறப்பட்ட சூழ்நிலையில், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் (பொறுப்பு), சிவகங்கை அவர்களின் கருத்துருவை, மேலே ஒன்று மற்றும் இரண்டில் படிக்கப்பட்ட அரசு கடிதம் மற்றும் அரசு ஆணையின்படி அரசு நன்கு ஆய்வு செய்து, மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும்

மாவட்ட ஆட்சித் தலைவர் (பொறுப்பு), சிவகங்கை அவர்களின் பரிந்துரையினை ஏற்று, சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், பானான்வயல் குரூப், பெரியகோட்டை விலக்கு ரோடு புல எண். 529/14, விஸ்தீரணம் 0.07.0 ஏர்ஸ் (அரசு புறம்போக்கு சாலை) என்ற இடத்தில் ஸ்ரீதாமணி செல்ல அய்யனார் கோவிலுக்கு 22 அடி உயரம் மற்றும் 25 அடி அகலம் உடைய தோரணவாயில் அமைக்கவும், அதனைப் பராமரிக்க ஆகும் செலவினை மனுதாரரே ஏற்க வேண்டும் எனவும், போக்குவரத்திற்கு எவ்வித இடையூறுமின்றி அமைக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் அனுமதி வழங்க அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கா. அலாவுதீன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை,
சென்னை–15.
மாவட்ட ஆட்சித்தலைவர்,
சிவகங்கை மாவட்டம்.
மாவட்ட காவல் கண்காணிப்பாளர்,
சிவகங்கை மாவட்டம்.
<u>நகல்</u>
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக
உதவியாளர், சென்னை–9.
பொது (சட்டம் மற்றும் ஒழுங்கு) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.